

Vol.29 | No. 10|October 2025
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



SEPTEMBER 8
FEAST OF IMMACULATE CONCEPTION




Feast day and Consecration at Sundarapandiyapuram




Shrine Blessing at Kattathurai




Consecration of the renovated Church at Bengiri

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 No :10 OCTOBER 2025



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Thomas Kuzhikodil**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. S.M.Edwinson**
**Mr. Iyathurai**
Published by:
**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Mary Jency V.M**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் - திருமுகம் | 08 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 11 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 12 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 12 |
| இல்வாழ்வு இயக்கம் | 14 |
| உறவிய மலர் | 16 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 18 |
| நலவாழ்வுபணிக்குழு | 23 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 24 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 25 |
| மறைமாவட்ட செய்திகள் | 26 |
| மறைவட்ட செய்திகள் | 27 |
| தென்காசி மறைபரப்புதளம் | 39 |
| MONTHLY AGENDA – OCTOBER 2025 | 40 |
| BISHOP'S ENGAGEMENTS - OCTOBER 2025 | 43 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/174/2025** **30 September 2025**

**Dear Readers,**

Greetings and Prayerful wishes from Bishop's House, Thuckalay!

As we continue our pastoral mission in service to God's people, I write to you with a heart full of devotion to our Blessed Mother, recognising her unique role in the mystery of salvation and her maternal care for all priests and the faithful. The Church has always held Mary in special veneration, and it is appropriate that we, as shepherds of souls, should lead by example in nurturing genuine Marian devotion both in our personal spiritual lives and in the parishes under our care.

The theological foundation for priestly devotion to Mary rests upon three pillars: the mystery of the Incarnation, the unity of the Paschal Mystery, and the ecclesial nature of the priesthood.

**Mary and the Incarnation:** The Word became flesh in Mary's womb through her fiat - "Let it be done unto me according to your word" (Lk 1:38). This moment of perfect obedience to the Father's will establishes Mary as the first and most perfect disciple. For priests, who are called to be alter Christus, Mary becomes the exemplar of total surrender to God's plan. Just as Christ was physically formed in Mary's womb, so must Christ be continually formed spiritually in the priest through his conformity to Mary's obedience and humility.

The Council of Ephesus (431) declared Mary to be Theotokos, the God-bearer. This dogmatic truth highlights that Mary's motherhood is not merely biological but profoundly theological. She is the Mother of God precisely because the One she bore is the eternal Son of the Father. For priests, this mystery sheds light on our own calling: we too are called to bear Christ to the world, to be instruments through which Christ is present in the Eucharist and other sacraments. Mary's divine maternity becomes the model for our priestly fruitfulness.

**Mary and the Paschal Mystery:** The Second Vatican Council teaches that Mary is "inseparably linked with Christ" in the work of salvation (Lumen Gentium, 61). Her presence at Calvary is not accidental but essential to the redemptive sacrifice. Standing at the foot of the cross, Mary participates in her Son's offering as the perfect example of how the Church - and especially her priests - should unite themselves to Christ's sacrifice. Saint John Paul II in Redemptoris Mater explains that Mary's "yes" at the Annunciation found its full expression in her "yes" at Calvary, where she offered her maternal heart for the salvation of all humanity.

For priests who daily offer the Eucharistic sacrifice, Mary's participation in the Paschal Mystery provides the ideal model. We learn from her how to unite our own sufferings and sacrifices to Christ's redemptive offering. Her Stabat Mater (the Mother standing at the foot of the cross) becomes our Stabat Sacerdos (the priest standing at the altar) – standing with unwavering faith even when the mystery of redemptive suffering challenges our understanding.

**Mary and the Ecclesial Nature of Priesthood:** The priest does not minister alone but as part of the college of priests in unity with the bishop. Likewise, Mary's role in salvation history is profoundly ecclesial. At Pentecost, she was present with the apostles in the upper room, praying for the coming of the Holy Spirit (Acts 1:14). Tradition views this scene as Mary being the Mother of the Church, interceding for the apostolic mission and the birth of the Christian community.

This aspect of Mary's mission in the church aligns with the community nature of the priesthood. Just as Mary's intercession caused the Holy Spirit to be poured out on the first apostolic college, her ongoing intercession continues to obtain graces for the priestly community today. The priest who develops devotion to Mary finds in her not only a personal mother but also the Mother of his priestly brotherhood.

Furthermore, Mary's perpetual virginity, as defined by the Church, demonstrates her complete devotion to God. This forms the theological foundation for priestly celibacy. Mary's virginal motherhood illustrates that total self-giving to God does not diminish but rather enhances one's capacity to be fruitful in the realm of

grace. Priests, through their celibate commitment, participate in this mystery of virginal fruitfulness.

St Louis de Montfort's insight that "it is through Mary that Jesus came into the world, and it is through Mary that he must reign in the world" applies particularly to priests. Our priestly ministry becomes most effective when carried out in union with Mary. She, who formed Christ in her womb, continues to form Christ in priests who entrust themselves to her maternal care.

The priest united to Christ through ordination finds in Mary the one who most perfectly demonstrates how to live this union. Her Immaculate Heart, fully conformed to the Sacred Heart of her Son, becomes the school where priests learn the attitudes of mind and heart necessary for effective ministry: humility, obedience, purity of intention, and total trust in Divine Providence.

**Practical Expressions of Marian Devotion**

Given this theological foundation, I strongly urge each of you to adopt concrete devotional practices. The daily recitation of the Holy Rosary should be our non-negotiable commitment. The Rosary is both a Christocentric and Marian prayer, guiding us through the mysteries of our redemption while teaching us to view them through Mary's contemplative gaze.

Begin each day with a morning act of consecration to Mary, placing your priestly ministry under her maternal protection. Incorporate Marian antiphons into your daily prayer, especially the Angelus. This brief prayer throughout the day helps keep your awareness of Mary's presence and intercession.

Study Mariology diligently as part of your ongoing theological development. The Church's teaching on Mary is not secondary but central to comprehending the mystery of Christ and the Church. Familiarise yourselves with conciliar and papal documents on Mary, especially Chapter VIII of Lumen Gentium and St John Paul II's Redemptoris Mater.

**Fostering Marian Devotion in Parishes in October**

October is the month dedicated to the Holy Rosary, which is considered the pinnacle of Marian devotions. St John Paul II describes it as "a compendium of the entire Gospel" in Rosarium Virginis Mariae. Through the Rosary, we reflect on the mysteries of

Christ’s life in communion with Mary, who “kept all these things, pondering them in her heart” (Lk 2:19).

For Pope Francis, the Rosary is a School of Prayer that teaches us to pray like Mary. He emphasises that it is not just repetitive recitation, but a contemplative prayer that draws us deeper into the mysteries of Christ's life. He frequently encouraged families to pray the Rosary together, describing it as a powerful method to strengthen family bonds and transmit faith to children. He has stated that the Rosary can bring peace to homes and help families confront difficulties. He emphasised that through the rosary, we learn from Mary how to be disciples of Jesus. He often discussed Mary’s role as our spiritual mother who guides us closer to her son.

The Pope has consistently promoted the Rosary as a prayer for peace - both personal peace and world peace. He has organised special Rosary events for global intentions, including prayers for peace in various conflict zones. He appreciated that the Rosary is a prayer accessible to everyone - the learned and unlearned, young and old. He values its simplicity while recognising its profound spiritual depth.

Pope Francis has also promoted special Rosary campaigns, including dedicating the month of May to praying the Rosary for the end of the pandemic, and encouraging Rosary prayers for peace in Ukraine and other troubled regions. The Pope saw the Rosary not as an outdated practice, but as a living, relevant prayer that can transform hearts and bring God’s grace into our daily lives.

Therefore, dear Fathers, I exhort you to implement daily Parish Rosaries whenever possible, either before or after Mass. Arrange Rosary processions during appropriate seasons and promote the practice of the Living Rosary, where groups of people each take responsibility for specific decades, fostering bonds of spiritual communion while ensuring consistent prayer for Parish intentions.

The Rosary has particular power for peace, family unity, and vocations. Parishes with strong Rosary devotion consistently experience greater spiritual vitality and produce more vocations to the priesthood and religious life. Mary, as Mother of Priests, is the primary advocate for priestly vocations.

Each Parish should embody the Church’s Marian character. Establish regular First Saturday devotions in response to Our Lady’s request

08/10/2025

at Fatima. These should include Mass, Eucharistic adoration, communal Rosary, and opportunities for confession. During May and October, organise special Marian celebrations, including daily Rosary, processions where appropriate, and catechetical programmes on Mary's role in salvation.

Promote the family Rosary as a means of sanctifying domestic life. The family that prays the Rosary together experiences Mary's maternal protection and grows in unity and holiness. Organise periodic family Rosary nights and encourage Rosary groups that meet in homes especially for Uraviam, bringing Mary's presence into our domestic churches.

Pay special attention to engaging young people in Marian devotion. Form youth Rosary groups and teach children the Rosary not as a burden but as a beautiful conversation with Mary about her Son. Use age-appropriate methods, including stories, songs, and visual aids, to help young minds grasp Mary's importance in God's plan.

**Eparchial Celebration of the Holy Rosary and Annual Retreat for the Priests**

I am pleased to announce our upcoming Diocese-level Rosary Rally on Saturday, 26 October 2025, organised by Marian Senai. This gathering should unite faithful from across our Eparchy for an afternoon of prayer, worship, and Marian devotion. All parishes should organise transportation and encourage maximum participation as a strong witness to our diocesan commitment to Marian devotion.

Our Annual Priests Retreat will be held from 5 to 10 October 2025, with Rev. Fr Jilson Mathew VC as the preacher. The spiritual retreat provides us, priests, with essential time for deep prayer, reflection, and renewal away from the constant demands of pastoral work, allowing us to reconnect with our core identity as men called to holiness and service. These periods of retreat reflect Christ's own practice of seeking solitude for prayer and enable priests to honestly assess their spiritual lives, receive the sacraments with greater devotion, and rekindle their original love for God and His people. Through silence, contemplation, and fraternal support during the retreat, priests emerge spiritually revitalised and pastorally energised, better prepared to serve generously within the Church while maintaining the inner life that underpins authentic ministry.

Dear Fathers, sincere devotion to Mary will bear fruit in our spiritual lives and pastoral effectiveness. We will find in Mary a model of humility, purity, and complete surrender to God's will. Her intercession grants the graces needed for faithful priestly service, teaching us to say "yes" to God's will even in sacrifice and suffering.

Parishes embracing authentic Marian devotion experience renewed spiritual vitality. Mary draws souls to her Son, and her maternal care fosters communities of faith, hope, and charity. Through her school, we learn the attitudes of heart that make us effective ministers of the Gospel.

I request each of you to carry out these directives with pastoral wisdom, tailoring them to your Parish communities' specific needs while keeping their core elements intact. May the Immaculate Heart of Mary be our refuge and the path that leads us to the Sacred Heart of Jesus! Through her intercession, may our priestly ministry yield abundant fruit for the glory of God and the salvation of souls.

**CONCLUSION**

The Universal Church dedicates October to the mission. While our Syro-Malabar Church traditionally held its mission observances at the beginning of the year, starting in 2026 the Syro-Malabar Mission Month will align with the Universal Church by being observed in October, coinciding with World Mission Sunday.As we pray for all missionaries and support them financially through our collections, let us endeavour to be worthy servants of Christ. On the 2nd October, we all priests and religious will gather at Christurajapuram to celebrate our special calling as shepherds of the Church. May this gathering enrich our love for Christ and our ministry to the faithful. As mentioned earlier, it is also the month of the holy rosary. St John Paul II described the Rosary as his favourite prayer, during which we meditate with Mary on the mysteries she pondered in her heart as a mother. Throughout this October, let us make good use of this beautiful prayer to draw closer to Jesus and Mary.

May our Blessed Mother intercede for each one of us!

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/62/2025

**ஆயர் சுற்றுமடல்**

**ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

பிறரன்புப் பணிகளின் பாதுகாவலர் புனித வின்செண்ட் தே பவுல் மற்றும் அருளாளர் பிரடரிக் ஓசானாம் ஆகியோர்களின் திருநாட்களை கொண்டாடும் பிறரன்புப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் திருநாள் நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிறிஸ்து யூபிலி 2025 ஆம் ஆண்டில் நாம் வாழ்ந்து வருகிறோம். இது நமக்கு கிடைத்த அரிய வாய்ப்பு. இவ் அரிய வாய்ப்பை 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' என்னும் மையச்சிந்தனையில் திருச்சபையோடு இணைந்து நாம் இறைப்பணி ஆற்றிவருகிறோம். இவ் யூபிலி ஆண்டை சிறப்புற செய்யும் வண்ணம் இவ்வாண்டின் செப்டம்பர் மாதம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. காரணம் செப்டம்பர் 7-ஆம் நாள் நமது திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள் இரு இளையோர்களை புனிதர் நிலைக்கு உயர்த்தினார். 8-ஆம் நாள் புனித மரியன்னையின் திருநாளை நாம் சிறப்பித்தோம். 9-ஆம் தேதி பிறரன்புப் பணியாளர் சபையை நிறுவிய அருளாளர் ஓசானாம் நினைவு நாள் மற்றும் 27 ஆம் தேதி புனித வின்செண்ட் தே பவுல் திருநாளையும் நாம் கொண்டாடினோம். இத்தகு சிறப்புமிகு இம்மாதத்தில் புனித வின்செண்ட் தே பவுல் சபினைர் பாதுகாவலர் விழாவை நினைவுகூரும் இத்திருநாளில் நானும் உங்களோடு மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறேன்.

திருவிவிலியத்தில் நல்ல சமாரியன் உவமையை லூக் 10 ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கின்றோம். சாதாரண ஒரு சமாரியன் தனது இரக்க செயல் மூலமாக 'நல்ல சமாரியன்' என்னும் நிலைக்கு உயர்ந்தது போல கார்லோ அக்குற்டஸ் எனும் இளைஞர் நாம் வாழும் இக்கால கட்டத்தில் வாழ்ந்தவர். 03.05.1991 இல் இங்கிலாந்து நாட்டில் பிறந்தவர் *15 ஆண்டுகளே இம்மண்ணில் வாழ்ந்தாலும்; அன்னை மரியாவின் பக்தியிலும் நற்கருணை பக்தியிலும் நிரம்ப வாழ்ந்தவர்.* நற்கருணை பக்தியை இணையதளம் மூலமாக உலகறியச்செய்து இன்று புனித நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்.

அவரோடு இணைந்து புனித நிலைக்கு உயர்த்தப்பட்டவர் அருளாளர் பியர் ஜியார்ஜியோ பிரசாட்டி. 24 ஆண்டுகள் மட்டுமே உலகத்தில் வாழ்ந்தாலும், ஏழைகளில் இறைவனை கண்டுணர்ந்து வாழ்ந்து இரக்க செயல்கள் புரிந்த ஒருவர். தனது 17-வது வயதில் புனித வின்செண்ட் தே பவுல் சபையில் இணைந்து பணியாற்றிய ஒரு வின்செந்தியன் என்பது குறிப்பிடத்தக்கது. 1901 ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் இத்தாலி நாட்டில் டியுரின் என்ற இடத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயது முதலே ஏழைகள் மீது அன்பு கொண்டு தனக்கு உள்ளதை பிறரோடு பகிர்ந்து வாழ்ந்தவர். பட்டப்படிப்பை முடித்தபோது தனது தந்தை பரிசளித்த விலையுயர்ந்த நான்கு சக்கர வாகனத்தை தவிர்த்து அதற்குரிய தொகையைப் பெற்றுக்கொண்டு அதைக்கூட ஏழைகளுக்கே வழங்கினார் என அவரது வரலாறு கூறுகிறது. இவரும் புனித கார்லோ-வைப் போல நற்கருணை பக்தியால் வலிமை பெற்றவர்.

தனது இரக்கச் செயல்களுக்காக இவர் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். இவரது வாழ்வு வின்செந்திய உறுப்பினர்களை மென்மேலும் பணி செய்யத் தூண்டும் என்பதில் ஐயமில்லை. மேலும் இவ் இருவரின் வாழ்வும் நமது இளையோருக்கு முன்மாதிரியான வாழ்வாக அமைந்துள்ளது. புனித ஜியார்ஜியோ-வின் வாழ்வை பின்பற்றி நமது இளையோர்கள் அதிகமாக நமது பங்குகளில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் சபையில் உறுப்பினராக இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிறரன்புப் பணியால் மட்டுமே ஒரு திருச்சபையை கட்டியெழுப்ப முடியும். ஆகவே, நமது பங்குகளில் இயன்றவரை பிறரன்புப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும். இச்சபைகளில் இணைந்து பணிசெய்ய வாய்ப்பு குறைந்தவர்கள் துணை உறுப்பினர்களாக இணைந்து பணியாற்ற வேண்டும். உறுப்பினர்கள் தாங்கள் எடுத்த உறுதிமொழிக்கு ஏற்ப உண்மையோடும், நீதியோடும். விருப்பு வெறுப்பு காட்டாமலும் பணி செய்ய அழைக்கப்பட்டவர்கள். அதுபோல, பொறுப்பாளர்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்து, இது இறைப்பணி என்ற உணர்வோடு பணிசெய்ய வேண்டும் என்றும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

“பசியால் மடியும் மனிதருக்கு உணவளி; ஏனென்றால் அவர்களுக்கு உணவளிக்காவிட்டால் நீ அவர்களை கொன்றொளிக்கிறாய்" என இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு இன்றைய உலகில் திருச்சபை எனும் பகுதி நம்மை அறிவுறுத்துகிறது.

"ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும் போது, அவர்களைப் பார்த்து நலமே சென்றுவாருங்கள். குளிர் காய்ந்து கொள்ளுங்கள், பசியாற்றிக் கொள்ளுங்கள் என்பாரென்றால் அதனால் பயன் என்ன? (யாக் 2:15,16) உயிர் இல்லாத உடல் போல, செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே. ஆகவே, வின்செந்தியர்களே, செயல்களில்லாத உங்கள் கூடுகையும் உயிரற்றதே என உணர்ந்து ஈடுபாட்டுடன் செயல்பட உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

1963 டிசம்பர் 8 இல் சூசைபுரத்தில் கிளைச்சபையாகத் தொடங்கி வின்செந்தியப் பணி 12.12.1997 இல் தக்கலை மத்தியப் பேரவையாக உயர்ந்து 62 ஆண்டுகளைக் கடந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். 20.07.2025 இல் மஞ்சாலுமூட்டில் நடைபெற்ற மத்தியப்பேரவை ஆண்டு விழாவிழாவில் நானும் கலந்துகொண்டு வின்செந்தியப் பணிகளைக் குறித்து கேட்டறிந்தேன். இப்பணி இன்னும் ஆழப்பட வேண்டும். அதற்கு உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது. உத்திரங்கோடு ஓசானாம் நிலையத்திலும், ஆசாரிப்பள்ளம் வான் (VAAN) கட்டிடத்திலும் செயல்படும் திட்டங்களில் முழுமையாக பங்கேற்று ஒத்துழைப்பு வழங்க உங்களை ஞாபகப்படுத்துகிறேன்.

தக்கலை மத்திய பேரவை முன்னெடுத்து வரும் கல்வி உதவிதிட்டம், ஜீபி கடனுதவித் திட்டம், சுயதொழில் கடனுதவி திட்டம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டுவரும் பிறரன்பு பணிகள் துரிதமாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு வருடமும் அக்டோபர்-2 அன்று "தேசத்தோடு ஒருநாள்" என்ற மையச்சிந்தனையில் மேற்கொள்ளப்படும் "துப்புரவு பணி" இவ்வாண்டும் அரசு மருத்துவமனையில் நடைபெற திட்டமிடப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்வதோடு இயன்றவர்கள் அனைவரும் தூய்மை பணியில் கலந்து கொள்ளவும் அறிவுறுத்துகிறேன்.

தக்கலை மறைமாவட்டத்தின் விரிவாக்கம் செய்யப்பட்ட இடங்களில் வின்செந்தியர்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ளவும் புதிய திட்டங்கள் தீட்டி செயல்படவும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். புதிய உறுப்பினர்கள் சபையில் சேர்ப்பதும், குறிப்பாக இளையோரை வின்செந்தியப் பிறரன்பு பணிகளில் இணைத்துக்கொள்வதும் இன்றைய காலகட்டத்தில் அவசியம் என்பதை உணரவேண்டும். வின்செந்திய செயல்பாடுகளில் ஆன்மீக ஆலோசகரின் வழிகாட்டுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும், வெளிநாட்டு உதவிகள் குறைந்து வரும் இக்காலகட்டத்தில் உள்ளூர் நன்கொடைகள் திரட்டுவதில் கூடுதல் கவனம் செலுத்தவும் வேண்டும். சபை பாதுகாவலர் திருநாளை சிறப்பிக்கும் இன்றைய தினத்தின் ஆலய காணிக்கையினை பங்குத்தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்டு கிளைச்சபைகளின் பிறரன்பு பணிக்காக பயன்படுத்தவும் கேட்டுக்கொள்கிறேன்.

கிளைச்சபைகள் உயிரோட்டமாக நடைபெற பங்குத்தந்தையின் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் கிளைச்சபையினர் பெறுவது அவசியம் என்பதையும் இத்தருணத்தில் அறிவுறுத்துகிறேன். சபைக்கும் வாழும் சமூகத்திற்கும் உப்பாக மாற ஒவ்வொரு உறுப்பினரும் உறுதிமொழி எடுக்க வேண்டும். உங்கள் ஒவ்வொருவரின் பணி சிறக்க வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கிறேன். இறைப்பணியில் இணைந்து இறையரசைக் கட்டியெழுப்புவோம்.

இறைவன் உங்கள் அனைவரையும் உங்கள் முயற்சிகளையும் உங்கள் தேவைகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக !

என்றும் ஈசோ மெசியாவில்

**ஆயர் இல்லம்**
**27.08.2025**

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**

## *Annual Retreat for Priests*

from 5- 10 October 2025 at Sangamam.

Preacher : Rev. Fr. Jilson Mathew VC.

# வரவிருக்கும் நிகழ்வுகள்

*05-10* அக்டோபர் - அருட்தந்தையர்களுக்கான வருடாந்திர தியானம்

*19* அக்டோபர் - தென்காசி மறைதொண்டு தளத்தில் ஜெபமாலை பவனி

*19* அக்டோபர் - மறைதொண்டுதள ஞாயிறு கொண்டாட்டங்கள்

*21-23* அக்டோபர் – மறைவட்ட அருட்தந்தையர்கள் கூடுகை

*26* அக்டோபர் - மறைமாவட்ட ஜெபமாலை பவனி

## குழந்தை ஈசோ இயக்கம்

**கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை லூக் 1.37**

செப்டம்பர் மாதத்திற்கான செயல்பாடுகள் அவரவர் பங்கில், அவர்களுக்கு பிடித்தமான ஏதாவது ஒரு செயல்பாடுகளை செய்து, அதை புகைபடம் எடுத்து பொறுப்பாளர்களுக்கு அனுப்ப வேண்டுமென அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் அனைத்து பங்கிலிருந்தும் பலவிதமான செயல்பாடுகளை அனுப்பி வைத்தனர். (மாதா வேடமணிதல், நோயாளிகளை சந்தித்தல், முதியோர் இல்லம் சந்தித்து செபித்தல், ஆலயம் சுத்தம் செய்தல், ஆலய வளாகத்தில் மரம் நடுதல்) போன்ற பல்வேறு வகையான செயல்பாடுகள் செய்தனர். செப்டம்பர் 24, புதன்கிழமை இரவு 8:30 மணிக்கு இயக்குநர் தலைமையில் பொறுப்பாளர்களுக்கான கூட்டம் இணையதளம் வழியாக நடைபெற்றது.

**இயக்குனர்**
**அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்**

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

**மறைவட்ட தேர்தல்**

தக்கலை பிலாங்காலை மறைவட்ட தேர்தல் 2025 செப்டம்பர் 21, ஞாயிற்றுகிழமை பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் வைத்து மதியம் 2.00 மணியளவில் தூயஆவி பாடலுடனும் மறைமாவட்ட இளையோர் இயக்கம் இயக்குநர் தந்தை அனில்ராஜ் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. நடுவண்செயற்குழு உறுப்பினர் செல்வி ஜினோ அனைவரையும் வரவேற்று பேசினார். தக்கலை பிலாங்காலை மறைவட்ட இயக்குநர் தந்தை ஜோஷி தேவலகரா CMI அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. நடுவண்செயற்குழு ஆலோசகர் செல்வன் அஜித் அவர்கள் தேர்தல் விதிமுறைகளை தொகுத்து வழங்கி தேர்தலை நடத்தினார். இத்தேர்தல் தக்கலை பிலாங்காலை மறைவட்ட இயக்குநர் தந்தை ஜோஷி தேவலகரா CMI அவர்கள் முன்னிலையில் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஜாண் கிறிஸ்டோ (பிலாங்காலை), செயலாளர்: ஜெனிலா (காட்டாத்துறை).



சூசைபுரம் மறைவட்ட தேர்தல் 2025 செப்டம்பர் 21, ஞாயிற்றுகிழமை புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்தில் வைத்து மதியம் 3.30 மணியளவில் தூயஆவி பாடலுடன் SMYM இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. நடுவண்செயற்குழு செயலாளர் செல்வி ஜினோ அவர்கள் தேர்தல் விதிமுறைகளை தொகுத்து வழங்கி தேர்தலை நடத்தினார். சூசைபுரம் மறைவட்ட இயக்குநர் தந்தை ஜோஸ் அவர்கள் முன்னிலையில் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.தலைவர்: அஜித் (கிள்ளியூர்), செயலாளர்: சேனிகா ( பிலாங்காலை)

நித்திரவிளை மறைவட்ட தேர்தல் 2025 செப்டம்பர் 28, ஞாயிற்றுகிழமை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் வைத்து மதியம் 2.00 மணியளவில் தூயஆவி பாடலுடன் SMYM இயக்குநர் தலைமையில் ஆரம்பமானது. நடுவண்செயற்குழு ஆலோசகர் செல்வன் அஜித் அவர்கள் தேர்தல் விதிமுறைகளை தொகுத்து வழங்கி தேர்தலை நடத்தினார். நித்திரவிளை மறைவட்ட இயக்குநர் தந்தை ஜோஸ் அவர்கள் முன்னிலையில் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவர்: ஜியோ (நித்திரவிளை), செயலாளர்: டெல்மா (வயலங்கரை)

படந்தாலுமூடு மறைவட்ட தேர்தல் 2025 செப்டம்பர் 28, ஞாயிற்றுகிழமை திரு இருதய மறைவட்ட ஆலயத்தில் வைத்து மதியம் 3.30 மணியளவில் தூயஆவி பாடலுடன் SMYM இயக்குநர் தலைமையில் ஆரம்பமானது. படந்தாலுமூடு அலகை சேர்ந்த பெனிஷா அனைவரையும் வரவேற்று பேசினார். நடுவண்செயற்குழு ஆலோசகர் செல்வன் அஜித் அவர்கள் தேர்தல் விதிமுறைகளை தொகுத்து வழங்கி புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். தலைவர்: பெனிஷா (படந்தாலுமூடு), செயலாளர்: அபிஷா (கழுவன்திட்டை).

**செயலர்,**

**செல்வி ஜினோ**

# இல்வாழ்வு இயக்கம்
## தக்கலை மறைமாவட்டம்



### மாதர் ஜோதிஸ் இயக்க மறைமாவட்ட பொறுப்பாளர்களின் கூடுகை

ஆகஸ்ட் 29, மாதர் ஜோதிஸ் இயக்க மறைமாவட்ட பொறுப்பாளர்களில் முதல் கூடுகையில் மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் மறைமாவட்ட செயலராக திருமதி நிஷா அவர்களும், துணைச் செயலராக திருமதி ஸ்டெல்லா அவர்களும், பொருளராக திருமதி ஷைலா அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலும் முக்கியமான தீர்மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டன.

### குழுப்பாடல் போட்டி



மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்களின் குழுப்பாடல் போட்டி செப்டம்பர் 27, 2025 அன்று பிலாங்காலை புனித குழந்தை தெரெசாள் மறைவட்ட ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை ஜோஷி தேவலக்கர அவர்கள் இந்நிகழ்ச்சியை துவங்கி வைத்தார்கள். காலை 9.30 மணிக்கு இறைவணக்க பாடலுடன் ஆரம்பமானது. மூன்று நடுவர்கள் கலந்து கொண்டு மதிப்பெண்கள் வழங்கினார்கள். இப்போட்டியானது மறைவட்ட வாரியாக நடைபெற்றது அனைத்து மறை வட்டங்களில் இருந்தும் சுமார் 35 குழுக்களாக

தாய்மார்கள் கலந்து கொண்டு தங்கள் பாடல் திறமையை வெளிப்படுத்தினார்கள். சுமார் மூன்று மணி அளவில் போட்டியானது நிறைவு பெற்றது. அன்றைய தினம் மாலை 4 மணிக்கு முடிவுகள் வெளியிடப்பட்டன.

## ஆகஸ்ட் மாத செயல்திட்டம்



2025-26 ஆம் ஆண்டிற்கான ஆகஸ்ட் மாத செயல் திட்டம், வீடுகளில் உணவு தயார் செய்து ஒவ்வொருவரும் குறைந்தது மூன்று நபர்களுக்கு பார்சல் செய்து வீதி ஓரங்களில் அல்லது வேறு இடங்களில் உள்ள வறியவர்களுக்கு உணவு அளித்தல் என்பதாகும். இச்செயல்திட்டம் அனைத்து மறைவட்டங்களிலும் நன்முறையில் செயல்படுத்தப்பட்டது.

## செப்டம்பர் மாத செயல்திட்டம்

செப்டம்பர் மாத செயல் திட்டம் வீட்டில் பயன்படுத்தாமல் வைத்திருக்கும்



நல்ல துணிகளை சேகரித்து மறைவட்ட பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தல். இச் செயல் திட்டம் அனைத்து மறைவட்டங்களிலும் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டது.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

# உறவிய மலர்

## உறவிய முதல் ஆண்டு விழா மற்றும் கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம்

மறைமாவட்ட உறவியம் நடத்தும் முதல் ஆண்டு விழா மற்றும் கிறிஸ்து யூபிலி கொண்டாட்ட விழா 2025 செப்டம்பர் 21 கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் மதியம் 2:00 மணியளவில் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உறவிய இயக்குநர் தந்தை மிஜோ புத்தன்புரயில் அனைவரையும் வரவேற்றார். உறவிய ஓராண்டு நிகழ்வுகளை அறிக்கையாக மறைமாவட்ட உறவியங்களின் ஆனிமேட்டர் அருட் சகோதரி ஜோதிஸ் FCC அவர்கள் சமர்பித்தார்கள். ஆண்டு விழாவினை மெருகூட்டும் வகையில் ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். மறைமாவட்ட அளவில் உறவிய கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தது இதுவே முதல் முறை. இவ்வாண்டு விழாவினை அழகூட்டும் வகையில், நித்திரவிளை மறைவட்டம் சார்பில் குழு நடனம், படந்தாலுமூடு மறைவட்டம் சார்பாக சொற்பொழிவு, ஆறுகாணி மறை வட்டம் சார்பாக குழு பாடல், மஞ்சாலுமூடு மறைவட்டம் சார்பாக குழு நடனம், களியல் மறைவட்டம் சார்பாக நாட்டிய நாடகம் மற்றும் தக்கலை பிலாங்கலை மறைவட்டம் சார்பாக டாப்ளோ போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது . இவ்விழாவிற்கு அருட்தந்தையர்கள் , அருட்சகோதரிகள், இறைமக்கள் என சுமார் 280 பேர் கலந்து கொண்டனர். இவ்விழா மாலை 4:00 மணிக்கு பாப்பரசர் கீதத்துடன் நிறைவு பெற்றது.

## செப்டம்பர் மாத உறவிய நிகழ்வுகள்

2025 செப்டம்பர் 07, ஞாயிற்றுக்கிழமை கிள்ளியூர் தூய தேவமாதா ஆலயத் திருவிழாவில் அனைத்து உறவியங்களின் ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. அனைத்து உறவியங்களிலிருந்தும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் SABS ஆராதனை துறவற சபை ஆலோசகர் Sr.அமலா SABS அவர்கள் தலைமையேற்று உரை ஆற்றினார்கள்.

செப்டம்பர் 14 ஞாயிற்றுக்கிழமை அன்று மாங்கரை புனித

வியாகப்பர் ஆலய புனித ஆரோக்கிய மாதா உறவியத்தின் ஆண்டு விழா திரு. கிறிஸ்டோபர் அவர்களது இல்லத்தில் வைத்து பங்கு தந்தை டோஜி கொழுவகண்டத்தில் அவர்கள் தலைமையில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது. பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இறுதியில் அனைவருக்கும் உறவிய மக்கள் உணவு வழங்கி உறவிய ஆண்டு விழாவினை சிறப்பித்தனர்.

கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம் உறவிய மக்கள் 28,29 ஆகிய தேதிகளில் திருப்பயணம் சென்றனர். அதில் பங்கு தந்தை அஜின் மற்றும் அருட் சகோதரிகள் பங்கு கொண்டனர்.

## உறவிய ஆண்டுவிழா

செப்டம்பர் 12 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் பங்கு குடும்ப விழாவோடு இணைந்து அனைத்து உறவியங்களின் ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தக்கலை மறை மாவட்ட உறவிய இயக்குனர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் கலந்துகொண்டு தலைவர் உரை ஆற்றினார். ஒவ்வொரு உறவியத்திலிருந்தும் கொடுக்கப்பட்ட நேரத்தில் உறவிய இறைமக்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் மற்றும் உறவிய ஆனி மேட்டர் அருட்சகோதரி லிசா SH அவர்கள் இந்நிகழ்வுகள் ஒருங்கிணைத்தனர். செப்டம்பர் 12, களியல் தூய மரியன்னை மறைவட்ட ஆலய திருவிழாவோடு இணைந்து உறவிய ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மஞ்சாலுமூடு மறைவட்ட உறவிய இயக்குனர் அருட்தந்தை. சந்தோஷ் கையாலப்பறம்பில் CMI அவர்கள் தலைமை தாங்கி தலைவர் உரை ஆற்றினார். ஒவ்வொரு உறவியத்திலிருந்தும் வழங்கப்பட்ட நேரத்தில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பங்குதந்தை மற்றும் ஊக்குவிப்பாளர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர்.

**இயக்குநர்,**

**அருட்தந்தை மிஜோ**

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

## ஓணம் கொண்டாட்டம்

KKSSS சுயஉதவிக்குழு (SHG) மற்றும் தெற்றியோடு, ஆசிர் வித்யாலயா சிறப்புப் பள்ளி இணைந்து 2025 செப்டம்பர் 5, ஆசிர் வித்யாலயா பள்ளி அரங்கத்தில் வைத்து கலாச்சாரம், சமூகம் மற்றும் இரக்கம் ஆகியவற்றின் கலவையான ஓணம் கொண்டாட்டம் நடைபெற்றது. இது சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்களையும் சுய உதவிக்குழு உறுப்பினர்களையும் ஒரு நாள் விழாவிற்கு ஒன்றிணைத்தது. KKSSS இயக்குனர் அவர்களின் தலைமை உரையுடன் கொண்டாட்டம் தொடங்கியது. தனது உரையில், அவர் சுய உதவிக்குழுவைப் பாராட்டினார், மக்களுக்கு சிறப்பு உதவிக்காக தரம் மற்றும் பராமரிப்பை வழங்குவதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக இது ஒரு "சிறந்த மையம்" என்று விவரித்தார். நிகழ்வின் கூட்டு மனப்பான்மையைக் கண்டதில் அவர் மிகுந்த மகிழ்ச்சியையும் திருப்தியையும் வெளிப்படுத்தினார். இதுபோன்ற பகிரப்பட்ட தருணங்கள் உண்மையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஒரு "மகிழ்ச்சியான தருணம்" என்பதை வலியுறுத்தினார். இந்த நிகழ்வின் தலைமை விருந்தினராக ஆசிர் வித்யாலயா பள்ளியின் முதல்வர் அருட்சகோதரி மேரி டோம் கலந்து கொண்டார். அவர்கள் ஓணத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் கலாச்சார வேர்கள் மற்றும் அது பிரதிநிதித்துவப்படுத்தும் மதிப்புகள் ஒற்றுமை, அறுவடை மற்றும் செழிப்பு குறித்து அவர் ஒரு நுண்ணறிவுமிக்க உரையை நிகழ்த்தினார். இதில் தெற்றியோடு சுய உதவிக் குழுவைச் சேர்ந்த



பெண்கள் மற்றும் சிறப்புப் பள்ளி குழந்தைகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். குழந்தைகளும் சுய உதவிக் குழு பெண்களும் இணைந்து நிகழ்த்திய நிகழ்ச்சிகளின் தடையற்ற ஒருங்கிணைப்பில் ஒத்துழைப்பு தெளிவாகத் தெரிந்தது. ஆட்டுக்கு குட்டி என்ற திட்டத்தின் வழியாக பயனாளி ஒருவருக்கு ஆடு வழங்கப்பட்டது. விழாவின் ஒருங்கிணைந்த பகுதியாக ஒரு ஆடம்பரமான பாரம்பரிய ஓணம் சத்யாவுடன் நிகழ்ச்சி முடிந்தது. இந்த சுவையான உணவைத் தெற்றியோடு, சுய உதவிக் குழுப் பெண்கள் மிகுந்த கவனத்துடனும் அர்ப்பணிப்புடனும் தயாரித்தனர். இந்த உணவை அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் ஆசீர்வதித்தார்கள், அவர் குழு பெண்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காகப் பாராட்டினார்.இந்த நிகழ்வு அனைவருக்கும் மனநிறைவு மற்றும் நல்லெண்ண உணர்வை ஏற்படுத்தியது.

## ஆரி வேலைப் பயிற்சி வகுப்பு தொடக்க விழா

கன்னியாகுமரி சமூக சேவைச் சங்கம் (KKSSS) சார்பில், அன்னிகரையில் 30 நாட்கள் கொண்ட ஆரி வேலைப் பயிற்சி வகுப்பு செப்டம்பர் 10, தொடங்கப்பட்டது. அன்னிக்கரை புனித மத்தேயு ஆலயப் பங்குத்தந்தை அருட்தந்தை ஜிஜி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பயிற்சி வகுப்பில் மொத்தம் 15 மாணவிகள் சேர்ந்துள்ளனர். திருமதி பாப்பா அவர்கள் பயிற்சியாளராகக் கொண்டு, அடிப்படை ஆரி எம்பிராய்டரி கற்றுக்கொடுக்கப்படுகிறது. நுட்பமான இந்தப் பயிற்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம், பங்கேற்பாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் அவர்களுக்கு ஒரு மதிப்புமிக்க தொழில் திறனை வழங்குவதாகும். இதன் மூலம், பெண்கள் சுயதொழில் மூலம் பொருளாதார சுதந்திரம் அடைந்து, சமூகத்தில் அதிகாரம் பெற (Empowerment) இத்திட்டம் வழிவகுக்கும். மக்களின் சமூக மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பில் KKSSS கொண்டுள்ள அர்ப்பணிப்பை இத்திட்டம் பிரதிபலிக்கும்.



## மருத்துவ முகாம் - கழுவன்திட்டை

கன்னியாகுமரி சமூக சேவைச் சங்கம் (KKSSS) மற்றும் ஆற்றூர், மரியா ஆயுர்வேதக் கல்லூரி இணைந்து, ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு, செப்டம்பர் 17, கழுவன்திட்டை தேவாலய வளாகத்தில் இலவச மருத்துவ முகாம் நடை




பெற்றது. இந்த நிகழ்வுக்கு வழிகாட்டலில் குழித்துறை நகராட்சியின் தலைவர் பொன் ஆசை தம்பி அவர்கள் தலைமை விருந்தினராகவும், குழித்துறை வழக்கறிஞர் ஐடன் சோனி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றனர். நிகழ்வின் தொடக்கமாக, ஆயுர்வேத கல்லூரியின் முதல்வர் திருமதி ஷீலா அவர்கள் யோகா, உணவு முறை மற்றும் பொதுவான ஆரோக்கிய குறிப்புகள் குறித்து மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கிய விழிப்புணர்வு வகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து, இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் மொத்தம் 79 நோயாளிகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுக்கு இலவச மருந்துகள் வழங்கப்பட்டன. KKSSS ஊழியர்களின் திட்டமிடல் மற்றும் முயற்சிகளின் விளைவாகவே இந்த நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த கூட்டு முயற்சி, சமூகத்திற்கு சேவை செய்வதிலும், பாரம்பரிய மருத்துவ முறைகளை மேம்படுத்துவதிலும் இவ்விரு அமைப்புகளின் அர்ப்பணிப்பைக் காட்டுவதாக அமைந்தது.

## ஆரி வேலைப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா

கிறிஸ்துராஜபுரம் பகுதியில் நடைபெற்ற 45 நாட்கள் கொண்ட ஆரி வேலைப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா, செப்டம்பர் 19, 2025 அன்று ஒரு சிறப்பான நிகழ்ச்சியுடன் முடிவடைந்தது. இந்த நிகழ்வில் அனைத்துப் பங்கேற்பாளர்களும், பயிற்சியாளர் திருமதி சரஸ்வதி அவர்களும் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய சுய-நிலையான திறன்களைப் பெறுவதன் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். மாணவர்கள் நிதிச் சுதந்திரம் அடைய தங்களின் புதிய திறன்களைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறி, அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டினார். ஆரி வேலைப் பயிற்சியாளர் திருமதி சரஸ்வதி, பயிற்சி அளித்த தனது திருப்திகரமான அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். மாணவர்களின் கடின உழைப்பைப் பாராட்டிய அவர், இந்த நுணுக்கமான கலையில் அவர்கள் தேர்ச்சி பெற எடுத்துக்கொண்ட முயற்சிகளை எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து, ஆரி மாணவி திருமதி சரிதா தனது பயிற்சி அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். திருமதி சரஸ்வதிக்கு நன்றி தெரிவித்த அவர், இந்த வகுப்பு எப்படித் தன்னையும் தன் தோழிகளையும் அதிகாரப்படுத்தியது (Empowered) என்றும். செயல்முறைப் பயிற்சி stunning வடிவமைப்புகளை

உருவாக்க உதவியது என்றும் கூறினார். பயிற்சியின் விளைவாக, அனைத்து மாணவர்கள் தாங்களே வடிவமைத்துத் தைத்த பிளவுஸ்களைப் பெருமையுடன் காட்சிப்படுத்தினர். அவர்களின் நுணுக்கமான கைவேலைப்பாடு, அவர்களின் திறமைக்குச் சான்றாக அமைந்து, அங்கிருந்த அனைவராலும் பாராட்டப்பட்டது. நிறைவு விழா, அசைவ விருந்துடன் முடிவடைந்தது. இது அனைவரையும் தங்கள் சாதனைகளைக் கொண்டாடவும், மகிழ்ச்சியுடன் உணவைப் பகிர்ந்து கொள்ளவும் உதவியது. இந்த வெற்றிகரமான நிகழ்வு, இந்தத் திறமையான ஆரி கலைஞர்களின் புதிய பயணத்திற்கு ஒரு தொடக்கப்புள்ளியாக அமைந்தது

## தையல் வகுப்பு தொடக்க விழா

மாலைக்கோடு பகுதியில் புதிய தையல் வகுப்புக்கான தொடக்க விழா செப்டம்பர் 15 அன்று நடைபெற்றது. இது. இப்பகுதியில் உள்ள தொழில்திறன் பயிற்சிக்கு ஒரு முக்கியமான படியாகும். KKSSS-ன் இயக்குனர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். தனது ஊக்கமூட்டும் தலைமையுரையில், அருட்தந்தை அவர்கள் சிறு வணிக வளர்ச்சி மற்றும் பெண்கள் அதிகாரமளித்தலில் (Women's Empowerment) திறன் பெறுதலின் முக்கியப் பங்கைப் பற்றி வலியுறுத்தினார். பயிற்சியாளர்கள் தங்கள் புதிய கைவினை மூலம் நம்பகமான சிறு வருமானத்தை ஈட்டி நிதிச் சுதந்திரம் அடைவதற்கான வாய்ப்பை அவர் குறிப்பாக எடுத்துரைத்தார். மாலைக்கோடு, பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, இந்த முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவித்து, முதல் தொகுதி மாணவர்கள் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தார். திருமதி சரஸ்வதி அவர்கள் பயிற்றுவிப்பாளராகக் கொண்ட இந்த ஒரு மாத கால பயிற்சித் திட்டம், உள்ளூர் பெண்களுக்குத் ஏற்படுத்தும், தன்னம்பிக்கையை சமூகத்தில் மேம்படுத்தவும் இலக்கு வைத்து இது தொடங்கப்பட்டுள்ளது.

## CTWWC திட்டத்தின் மீளாய்வு கூட்ட அறிக்கை

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் CTWWC (Changing the Way We Care) திட்டத்தின் மீளாய்வு கூட்டம், 2025 செப்டம்பர் மாதம் 18 மற்றும் 19 ஆம் தேதிகளில் அழகியமண்டபம்,அன்னை ஆதா மையத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கூட்டம், திட்டத்தின் வளர்ச்சி நிலைகள், இதுவரை செய்த செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான ஒரு முக்கிக் கூட்டமாக அமைந்தது. நிகழ்ச்சி CRS திட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வி சஞ்சனா மற்றும் திரு அருளப்பா ஆகியோரால் ஒருங்கிணைக்கப்பட்டது. முதல்நாளில், நான்கு மறைமாவட்ட குழுக்களிடமும் இதுவரை செய்த கேட்கிப்பிங் செயல்பாடுகள் எந்த குழுக்கள் இடம் செயல்படுத்தின என்பதை குறித்த புரிதல்களை குழு செயல்பாடு மூலம் அனைவரும் பகிர்ந்து கொண்டனர், பின்னர் அதனை

மதிப்பீடு செய்து அதைப்பற்றிய விளக்கங்கள் பகிரப்பட்டது. இரண்டாம் நாளில், குழந்தைகள் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட குழுக்களில் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் குழந்தைகளை எவ்வாறு அடையாளம் கண்டு அவர்களைப் பாதுகாக்க வேண்டும் அவர்களுக்கு யார் மூலம் உதவிகள் கிடைக்கும் என்பதை குழு செயல் திட்டம் மூலம் பகிரப்பட்டது. குழுவினர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, திட்டத்தின் அடுத்த செயல்பாடுகள் குறித்து தேவையான பரிந்துரைகளை முன்வைத்தனர். CRS குழுவினர் ஒவ்வொரு குழுவுடனும் நேரடியாக கலந்துரையாடி முக்கியமான கருத்துகளை திரட்டி, திட்டத்தில் உறுப்பினர்களின் பங்களிப்பை உறுதி செய்தனர். ஒத்துழைப்பு மற்றும் குழுப் பணியின் மூலம், திட்டத்தின் அடுத்த கட்ட செயல்பாடுகளுக்கான தெளிவான வழிமுறைகள் பகிரப்பட்டது. இந்த கூட்டம், திட்டத்தின் செயல்திறன் மற்றும் செயல்பாடுகளை எவ்வாறு செய்யலாம் என்பதை தெளிவுபடுத்தும் கூட்டமாக அமைந்தது.

## கேட்கிப்பிங் பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் CTWWC குழு. செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி தக்காளிவிளை, திருகுடும்ப ஆலயத்தில் வைத்து பங்குப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் பங்கு உறுப்பினர்களுக்காக "கேட்கீப்பிங் பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சி, பின்தங்கிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை பாதுகாக்கவும், அவர்களுக்கு தேவையான ஆதரவும் பராமரிப்பும் பெறச் செய்யவும் சமூகத்தில் விழிப்புணர்வையும் பொறுப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் CTWWC திட்ட பணியாளர்கள் திருமதி ஜெனிஷா மற்றும் திருமதி சுஜி லெட் ஆகியோர் தங்கள் அனுபவங்களை பகிந்து கொண்டனர். திட்டம் குறித்த தெளிவான புரிதல்களை வழங்கினார்கள். பங்கு உறுப்பினர்கள் ஆபத்துக்குள்ளான குடும்பங்களை விரைவில் அடையாளம் காணும் திறனையும் தேவையான சேவைகளை அவர்களுடன் இணைப்பது எப்படி என்பதையும் பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சி பங்கு உறுப்பினர்களிடையே விழிப்புணர்வை உருவாக்கியது. தங்கள் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தையின் நலனை பாதுகாக்கும் பொறுப்புணர்வு தற்போது அதிகமாக உள்ளது என்றும், குடும்பங்களில் சிரமம் தெரிந்தால் உடனடியாக உதவ தயாராக இருக்கிறோம் என்றும் பலர் பகிர்ந்து கொண்டனர்.

***செயலர்***
***அருட்தந்தை மகேஷ்,***

# நலவாழ்வுபணிக்குழு

## பங்கு நலவாழ்வு பணிக்குழு துவக்கம்

நல வாழ்வு பணிக்குழு சார்பில் தக்கலை மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங்களில் பங்கு நல வாழ்வு பணிக்குழு தொடங்க திட்டமிடப்பட்டு பல்வேறு பங்குகளில் தெடங்கப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதம் நல வாழ்வு பணிக்குழு உறுப்பினர்கள் சூசைபுரம், பிலாங்கரை, தெற்றியோடு, வாறுதட்டு, கழுவந்திட்டை மற்றும் முழுக்கோடு பங்குகளுக்கு சென்று, ஒவ்வொரு பங்குகளிலும் 6 முதல் 8 பேர் கொண்ட ஒரு பங்கு நலப்பணிக் குழு



தொடங்கப்பட்டது. இந்தக் குழுவின் நோக்கம், முதியோர்களைப் பராமரிப்பது, நோயாளிகள் சந்திப்பது மற்றும் தனிமையில் இருப்பவர்களை சந்தித்து ஆற்றுப்படுத்தல் போன்றவைகளை திருச்சபை எல்லைக்குள், அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்குவது ஆகும். மேலும் அவசர மருத்துவ உதவிகள் தேவையெனில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் மொபைல் படுக்கை நோயாளிகள் பிரிவை பயன்படத்தலாம் என கூறப்பட்டது.

**செயலர்,**

**அருட். மிஸி மரியா**




# வின்செனட்-தே-பவுல் சபை

## திட்டம் வழங்குதல்

புனித வின்செனட் தே பவுல் சபை, சூசைபுரம், புனித மேரி கிளை சபையில் ஆகஸ்ட் 31, சுய தொழில் கடன் உதவி 11 நபர்களுக்கு 9,500 ரூபாய் வீதம் ரூபாய். 104500/- வழங்கப்பட்டது. மத்திய சபை தலைவர் சகோதரர் ராபி அவர்கள் முன்னிலையில் பேரருட்தந்தை ஜோண்சிலால் அவர்களின் தலைமையில் திட்டத்தொகை வழங்கப்பட்டது. உடன் வட்டார சபை தலைவர் சகோ. ஜாண் அவர்கள் மற்றும் கிளை சபை தலைவர், பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய இளையோர் வின்செந்தியர்கள் சார்பில் செப்டம்பர் 28 நோயாளிகள் சந்திப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நடைபெற்றது. நெய்யூர் மருத்துவமனையில் பிறரன்பு பணி ஆர்வமுள்ள பங்கு இளையோர்கள் நோயுற்றோரை சந்தித்து ஜெபித்தார்கள். அவர்களுக்கு பங்கு சார்பில் பங்குத்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் வழங்கிய சிகப்பு வாழைக்குலை மூன்றும் சுமார் 175 கவர் பிஸ்கட், 12 கிலோ ஆப்பிள் 13 கிலோ ஆரஞ்சு போன்றவை வழங்கப்பட்டது.

காரோடு புனித சூசைப்பர் ஆலயத்தில் செயல்படும் புனித சூசையப்பர் கிளை சபை சார்பில் திட்டம் வழங்குதல் நிகழ்வு செப்டம்பர் 20 காலை 11 மணியளவில் நடைபெற்றது. திட்டம் குறித்து மத்திய பேரவையின் இணைத்திட்ட அலுவலர் சகோதரர் சிபுமோன் விளக்கி கூறினார். சுழற்சி திட்டத்தை கிளை சபையின் ஆன்மீக ஆலோசகர் அருள் தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமை ஏற்று வழங்கினார். இத்திட்டம் நான்கு பேருக்கு பன்னிரண்டாயிரம் விதம் 48000 ரூபாயும் 19 பயனாளிகளுக்கு ஒன்பதாயிரம் வீதம் 171000 ரூபாயும் சேர்த்து 2,19,000 ரூபாய் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளை சபை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். சிறப்புற இத்திட்டத்தை செயல்படுத்தி வரும் கிளை சபையினரை மத்திய சபையினர் பாராட்டினர்.

**தகவல் சேகரிப்பு**

**D. P. ஷாஜி**

**தகவல் தொடர்பு அலுவலர்**

# அருட்சகோதரர்களிடமிருந்து

"ஆண்டவர் என்னைத் தம் அன்பனாகத் தேர்ந்தெடுத்துள்ளார்". (திபா 4:3)

அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளார்கள். ஆகஸ்ட் மாதம் 4 ஆம் தேதி குருக்களின் பாதுகாவலர் தினம், ஆகஸ்ட் 15 தேதி புனித கன்னிமரியாவின் விண்ணற்பு மற்றும் நமது நாட்டின் சுதந்திர தினம் ஆகியவை சிறப்பாக அனைத்து உயர் குருமடங்களிலும் கொண்டாடப்பட்டது. மேலும் 27 ஆம் தேதி நமது திருச்சபையின் உயர் பேராயர் மாமன்றத்தில் நடைபெற்ற தமிழ் திருப்பலியில் ஆலுவா மற்றும் கோட்டயம் உயர் குருமடங்களில் பயிலும் அருட்சகோதரர்கள் உதவி புரிய சென்றனர். மேலும் மாத இறுதியில் குருமடங்களில் தேர்வுகள் நடைபெற்றது. பின்னர் அனைவரும் விடுமுறைக்காக வீடு திரும்பினர். திருச்சூர் மேரி மாதா குருமடத்தில் பயிலும் அருட்சகோதர்கள் பயிற்சி முகாமுக்குச் சென்றனர்.

**இப்படிக்கு**
**அருட்சகோ திவின் ராஜ் D S & டெபின்**

## இறுதி மரியாதை

### அருட்சகோதரி ஜோசியா எஸ்.டி.எஸ் (84)

அருட்சகோதரி ஜோசியா அவர்கள் நமது மறைமாவட்டத்தில் 35 ஆண்டுகள் பணியாற்றினார். 2025 செப்டம்பர் 17, நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். இறுதிச் சடங்கு செப்டம்பர் 19, காலை 10:00 மணிக்கு மஞ்சாலுமூடு SDS கன்னியர் இல்ல ஆலயத்தில் நடைபெற்றது.

### அருட்சகோதரி சோபியா எஸ்.டி.எஸ் (84)

அருட்சகோதரி சோபியா சாக்கோ எஸ்.டி.எஸ் அவர்கள் நமது மறைமாவட்டத்தில் 21 ஆண்டுகள் மஞ்சாலுமூட்டில் (1973 - 1978; 2009 - 2025) பணியாற்றினார். 2025 செப்டம்பர் 24, நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். இறுதிச் சடங்கு 25 செப்டம்பர் 2025 அன்று காலை 10:00 மணிக்கு மஞ்சாலுமூடு SDS கன்னியர் இல்ல ஆலயத்தில் நடைபெற்றது.

# மறைமாவட்டச் செய்திகள்

## அருட்தந்தையர்களுக்கான கூட்டம்

2025 செப்டம்பர் 11, காலை 9:30 மணிக்கு ஆராதனையுடன் அருட்தந்தையர்கள் கூடுகை சங்கமத்தில் ஆரம்பமானது. அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களுடைய தலைமையில் நற்கருணை ஆராதனை நடைப்பெற்றது. கூட்டம் அதிகாரப்பூர்வமாக காலை 11.15 மணிக்கு தொடங்கியது. இக்கூட்டத்திற்கு ஆயர் அவர்கள் தலைமை தாங்கினார். பேரருட்தந்தை. ஜோஷி குளத்தும்கல் அவர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். அருட்தந்தை ஆண்டனி மகேஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அருட்தந்தை. ஜஸ்டின் செருவேலில் முந்தய கூட்ட அறிக்கையை சமர்ப்பித்தார். அருட்தந்தையர்கள் மற்றும் மறைபரப்பு தள ஒருங்கிணைப்பாளர்கள் தங்களின் பணி அனுபவங்களையும், அந்தந்த நிலையங்களில் உள்ள முன்னேற்றங்களையும் எடுத்துரைத்தனர். மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களின் ஆயர் திருநிலைப்பாட்டின் 13 வது ஆண்டு விழாவை குருக்கள் அனைவரும் சேர்ந்து கொண்டாடினார்கள். ஓணப்பண்டிகை விருந்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

## பங்குகளில் நற்கருணை ஆராதனை

2025 செப்டம்பர் 12 வெள்ளிக்கிழமை ஒரு மணி நேரம் நற்கருணை ஆராதனையில் செலவிடுமாறு அனைத்து சீரோ மலபார் ஆலயங்களுக்கும் உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் அவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வழைப்பை ஏற்று, நமது மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும், கன்னியர் இல்லங்களிலும், நிறுவனங்களிலும் நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது.

## வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள்

2000 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி நிறுவப்பட்ட சேனங்கோடு அசிசி வித்யாலயா, அறிவுத்திறன் குறைபாடுள்ள மாணவர்களை மேம்படுத்தும் பணியின் 25 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. 2025 செப்டம்பர் 27 வெள்ளி விழா கொண்டாட்டங்களை மாலை 4:30 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் ஜூபிலி நினைவுச் சின்னம் வெளியிடப்பட்டது. இவ்விழாவினை அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்களால் சிறப்பிக்கப்பட்டது.

# மறைவட்டச் செய்திகள்

## தக்கலை–பிலாங்காலை

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன் கோணம்

2025 செப்டம்பர் 05, முதல் வெள்ளி ஆராதனை திருப்பலி நடைபெற்றது. அன்றைய தினம் தடிக்காரன் கோணம் ராணிமரியா காப்பகத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது. 21 ஆம் தேதி, மறைமாவட்ட திருத்தொண்டு பணிக்குழு மற்றும் சீனாய் இறையியல் கல்லூரி மாணவர்கள் இணைந்து நடத்திய திருத்தொண்டு திருப்பயணம் வெள்ளாம்பி புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்திலும், தடிக்காரன் கோணம் புனித சூசையப்பர் ஆலயத்திலும் அருட்தந்தை பிரின்ஸ் தலைமையில் நடைபெற்றது. தடிக்காரன்கோணம், பிலாங்காலை, கைசாலவிளை, நாகர்கோவில், ஆனையடி, வட்டக்கோட்டை ஆகிய ஆலயங்களில் உள்ள சிறுவர் சிறுமியருக்கு இறையழைத்தல் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு அருட்தந்தை பிரின்ஸ் தலைமையில்நடைபெற்றது.

### ▶ புனித அன்னை தெரசா ஆலயம் கல்லுவிளை

பாதுகாவலி திருவிழா செப்டம்பர் 3 2025 அன்று பங்குத்தந்தை மகேஷ் ஆன்றணி தலைமையில் கொடியேற்றத்துடன் தொடங்கி செப்டம்பர் 7 அன்று நிறைவு பெற்றது. விழாவில் தினமும் ஆடம்பர திருப்பலியும் மறையுரையும் நடைபெற்றது. சிறப்பாக சனிக்கிழமை திருப்பவனியும் செப்டம்பர் 07 தேதி ஞாயிறு காலை திருப்பலியும் தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றது. மாலையில் கூட்டமாவு CSI சபை போதகர் அருட் திரு. மனோபா அவர்கள் தலைமையில் மறைக்கல்வி மற்றும் இயக்கங்களின் ஆண்டு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக சூசைபுரம், மறைக்கல்வி ஆசிரியர் திருமதி. ஜெயராணி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சிகளை விழா குழுவினர் ஒருங்கிணைத்தார்கள்.

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் காட்டாதுறை

ஆலய எதிர்ப்புறம் அமைந்துள்ள குருசடியைச் சார்ந்த வளாகம் புதுப்பிக்கப்பட்டு மந்திரிக்கப்பட்டது. குடிசையின் அருகில் ஒரு சிற்றாலயம் எழுப்பப்பட்டு செப்டம்பர் மாதம் 14ஆம் நாள் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. திருவிழாவை முன்னிட்டு செப்டம்பர் மாதம் 19, 20, 21 ஆகிய நாட்களில் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. மார்த்தாண்டம் மறை மாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை ஜெனிற்றோ அவர்கள் மூன்று நாட்களையும் வழி நடத்தினார்கள்.

### புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை



8 ஆம் தேதி மாதாவின் பிறந்தநாள் அன்று மாலையில் திருப்பலி மற்றும் கேக் வெட்டி அனைவருக்கும் கேக் மற்றும் பாயாசம் வழங்கப்பட்டது. 12 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வறியவர்க்கு உணவு அளித்தல் நிகழ்வு நடைபெற்றது.

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

செப்டம்பர் 01, மாதாவின் பிறந்தநாளை முன்னிட்டு எட்டு நோன்பு திருப்பலி மற்றும் ஜெபமாலை ஆலயத்தில் தொடங்கியது. 3ஆம் தேதி, சவுதி அரேபியாவில் வேலை செய்து மரணமடைந்த திரு ஐயப்பன் அவரின் வீட்டிற்கு பங்குதந்தை பேரருட்தந்தை ஜோஷி அடிகளார் மற்றும் உறவிய தலைவர்கள் ஆலய பணியாளர் சென்று செபித்தனர். 7ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்கு திருவிழாவிற்கான கலைப்போட்டிகள் நடைபெற்றது. மாலையில் பங்குதந்தை மற்றும் அருட்தந்தை பிரின்ஸ் தலைமையில் மாணவர்களுக்கு இறையழைத்தல் வகுப்பு நடைபெற்றது. மாலையில் பங்குபேரவை கூட்டம் நடைபெற்றது.

8ஆம் தேதி மாதாவின் பிறந்த நாளை முன்னிட்டு மாலையில் திருப்பலி மற்றும் ஜெபமாலைப் பவனி நடைபெற்றது. திருப்பலி முடிந்த உடன் பங்குதந்தை அனைவருக்கும் ஜெபமாலை பரிசாக வழங்கினார். நேர்ச்சை வழங்கப்பட்டது. 12ஆம் தேதி கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளுக்கும் சவால்களையும் நினைத்து மறைமாவட்ட ஆயர் அவர்களின் அறிவுரையின் படி மாலையில் பங்குதந்தை தலைமையில் திருப்பலி மற்றும் ஒரு மணி நேர ஆராதனை நடைபெற்றது. 13 ஆம் தேதி காலை 11 மணியளவில் நோயாளிகளுக்கான திருப்பலி மற்றும் ஆராதனை தொடர்ந்து தைலம் பூசுதல் மற்றும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. 14 ஆம் தேதி மறைக்கல்வி குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. 20 ஆம் தேதி திருமுழுக்கு பங்குதந்தை 4 குழந்தைகளுக்கு வழங்கினார். மறைக்கல்வி ஆசிரியர் கூட்டம் மற்றும் திருப்பணியாளர் கூட்டம் நடைபெற்றது. 25 ஆம் தேதி காலையில் திருப்பலி முடிந்த உடன் திருவிழாவிற்கு ஆயத்தமாக பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. 26 ஆம் தேதி பங்கு குடும்பவிழா பங்குதந்தை தலைமையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. தட்டுநேர்ச்சை, கொடி நேர்ச்சை வழிபாடு திருப்பலி ஆகியவை நடைபெற்றது. திருப்பலி முடிந்த உடன் இரவு உணவு வழங்கப்பட்டது. காலையில் மாதர்ஜோதிஸ் மறைமாவட்ட குழுப்பாடல் போட்டி நடைபெற்றது. 27 ஆம் தேதி இரண்டாம் நாள் இரக்கத்தின் ஊற்று தியான மையம் இயேசுவில் ஜேம்ஸ் தலைமையில் நற்செய்தி பெருவிழா 3 நாட்கள் நடைபெற்றது. மூன்றாம் நாள் மாலையில் ஜெபமாலை மற்றும் மறைக்கல்வி ஆண்டுவிழா நடைபெற்றது. நான்காம் நாள் திருப்பலியை தொடர்ந்து நற்செய்தி பெருவிழா, பாவசங்கீர்த்தனம் மற்றும் இரவு உணவு வழங்கப்பட்டது. 30 ஆம் தேதி திருப்பலி முடிந்த உடன் பக்த சங்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது. அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை பேரருட்தந்தை ஜோஸி தேவலக்கரா cmi முன்னின்று நடத்தினார்.

## மஞ்சாலுமூடு

### ▶ திருக்குடும்ப ஆலயம் முக்கூட்டுக்கல்

மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்கள் தங்கள் வீடுகளில் தயார் செய்த உணவு பொட்டலங்களை சேகரித்து 45 சாலையோர ஆதரவற்றோருக்கு 30-8-25 அன்று



வழங்கி உணவற்றோருக்கு உணவு வழங்கும் பிறரன்பு பணி செய்தார்கள். முக்கூட்டுக்கல் திருக்குடும்ப தேவால த்தில் புனித மாதாவின் பிறப்புத் திருநாளை முன்னிட்டு செப்டம்பர் 1 முதல் 8 வரை ஆலயத்தில் ஜெபமாலை, திருப்பலி, நவநாள் ஜெபம் ஆகியவை நடைபெற்றது. ஏழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் மாதாவின் பிறப்பு மற்றும் ஓணம் விழா ஆகிய இரண்டும், கலை நிகழ்ச்சிகள் மற்றும் அன்பின் விருந்துடன் சிறப்பாக வழங்கி கொண்டாடப்பட்டது. எட்டாம் நாள் ஜெபமாலை பவனி ஆலயத்தில் ஆரம்பித்து இளம் குரு மடத்தில் முடிவடைந்தது. அதைத் தொடர்ந்து ஆலயத்தில் நவநாள் ஜெபம் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

### புனித பெனடிக்ட் ஆலயம் பென்கிரி



ஆலய அர்ச்சிப்பு வெள்ளிவிழா மற்றும் ஆலய பாதுகாவலர் விழா செப்டம்பர் 16 முதல் 21 ஆம் தேதி வரை முப்பெரும் விழாவாக நடைபெற்றது. 16 ஆம் தேதி பிற்பகல் 3 மணி அளவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் புதுப்பிக்கப்பட்ட ஆலய மற்றும் கொடிமரம் மந்திரிப்பு, வெள்ளி விழா தொடக்கம் ஆகிய நிகழ்வுகளை நடத்தினார். தொடர்ந்து 16 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை ஆலய குடும்ப விழா மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெற்றது. 3 நாட்கள் நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது.

### புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு

திருத்தொண்டு பணியாளர்கள் 28 ஆம் தேதி ஆம்பூரில் உள்ள மறைத்தொண்டு நிலையத்திற்கு சென்று அங்குள்ள மக்களை சந்தித்து உதவிகள் வழங்கினார்கள்.

### புனித தோமையார் தேவாலயம் மாறப்பாடி

செப்டம்பர் 03, காலை 10.30 மணியளவில் பங்குத்தந்தை தலைமையில் ஓணம் பண்டிகை ஆரம்பமானது. மாதர் ஜோதிஸ் தாய்மார்களால் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு சிறப்பிக்கப்பட்டது. ஓணப் பண்டிகையை பார்வையிடுவதற்காக மாதர் ஜோதிஸ் இயக்குனர் அருட்தந்தை . ஜிம்மி அவர்கள் வருகை புரிந்தார். மாதாவின் பிறப்பு திருநாளை முன்னிட்டு செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 8 வரையிலான நாட்களில் ஆலயத்தில் காலை 5.45 மணிக்கு ஜெபமாலையும் அதனை தொடர்ந்து சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. 8 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதனைத் தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. 21ஆம் தேதி நடைபெற்ற உறவிய கிறிஸ்து யூபிலி கொண்டாட்டத்தில் எமது பங்கிலிருந்து பங்குதந்தை தலைமையில் உறவிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். இதில் மறைக்கல்வி மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. 12 ஆம் தேதி சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ராபேல் தட்டில் அவர்கள் அறிவித்தபடி ஒரு மணி நேர நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. 28 ஆம் தேதி புனித வின்சென்ட் தே பவுல் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 27 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் சார்பாக நடைபெற்ற பாடல் போட்டியில் எமது மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் பங்கு பெற்று இரண்டாம் பரிசு பெற்றனர்.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்



மாதாவின் பிறப்பு திருநாளை முன்னிட்டு 1- ஆம் தேதி முதல் 8- ஆம் தேதி வரை திருப்பலி, நவநாள் மற்றும் ஜெபமாலை நடைபெற்றது. 8 ஆம் தேதி மாதாவின் பிறப்பு திருநாள் ஆடம்பர திருப்பலி ஜெபமாலை பவனி மற்றும் நவநாள் நடைபெற்றது. 20 ஆம் தேதி உதவி பங்குதந்தை அவர்களின் பெயர் கொண்ட திருவிழா கொண்டாடப்பட்டது.

## படந்தாலுமூடு

### மார்ட்டின் டி போரஸ் ஆலயம், கழுவன் திட்டை



1 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை மாதாவின் பிறவி திருநாளை முன்னிட்டு மாலை 5:30 மணிக்கு ஜெபமாலை மற்றும் திருப்பலி நடைபெற்றது. 26 ஆம் தேதி குழந்தை இயேசு இயக்கம் மாணவர்கள் பல்வேறு புனிதர்களின் வேடம் அணிந்து திருப்பலியில் பங்கேடுதனர்.

### திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

1 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை மாதாவின் பிறவித் திருநாளை முன்னிட்டு 8 நாட்களும் மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதை தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது. இறுதி நாள் திருப்பலியைத் தொடர்ந்து ஆடம்பர ஜெபமாலை பவனி நடைபெற்றது. 15 ஆம் தேதி மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களின் தந்தை திரு குட்டி நாடார் அவர்களின்



நினைவு நாள் திருப்பலி மேதகு ஆயர் தலைமையில் காலை 6:15 மணிக்கு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அதை தொடர்ந்து ஆயர் அவர்களின் ஆயர் திரு நிலைப்பாட்டு நாள் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. 25 ஆம் தேதி மறைவட்ட அளவில் மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக நடைபெற்ற பாட்டுப் போட்டியில் மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டு முதலிடம் பெற்றார்கள்.

### புனித வின்சென்ட் தே பவுல் ஆலயம் மார்த்தாண்டம்

புனித வின்சென்ட் தே பவுல் ஆலயத்தின் திருவிழா 26 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை நடைபெற்றது. 26 ஆம் தேதி மற்றும் 27 ஆம் தேதி



மாலை 5:45 மணிக்கு ஜெபமாலை, திருப்பலி அதை தொடர்ந்து நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. நற்செய்திப் பெருவிழாவை அருட் தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் வழிநடத்தினார்கள். 28 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு காலை ஜெபமும் அதைத்தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. காலை 11:30 மணிக்கு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றது.

### புனித தோமையார் ஆலயம் பளுகல்



செப்டம்பர் 07, இளைஞர்களுக்கான ஒரு நாள் தியானம் நடைபெற்றது. இந்த தியானத்தின் நோக்கம் இளைஞர்களை நல்ல சிந்தனையுடன், பொறுப்புடன், கடவுளின் வழியில் நடக்க தயார் படுத்துவது.

## களியல் மறைவட்டம்

### திரு இருதய ஆலயம் பள்ளிக்கோணம்

1 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை மாதா நவநாள் சிறப்புக் கொண்டாட்டம் நடைப்பெற்றது. 6 ஆம் தேதி கேரள பாரம்பரிய பண்டிகையான ஓணம் பண்டிகை சிறப்பிக்கப்பட்டது. 8 ஆம் தேதி திங்கட்கிழமை, மாதர் ஜோதிஸ் இயக்கம் மற்றும் மரியாவின் சேனை இயக்கம் உறுப்பினர்களால் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. 14 ஆம் தேதி திருச்சிலுவை புகழ்ச்சி நாள் சிறப்பிக்கப்பட்டது. 14 ஆம் தேதி முதல் இனி வரும் டிசம்பர் மாதம் வரை எமது பங்கில் "கிறிஸ்துவின் ஜூபிலி 2025 " எதிர் நோக்கின் திருப்பணிகள்" என்ற மைய சிந்தனையை மையமாக வைத்து நான்கு உறவியங்களிலும் திரு விவிலியத்தை மகிமைப் படுத்தும் படி "திரு விவிலிய ஜோதி" துவங்கப்பட்டு, சுழற்சி முறையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயணித்துக் கொண்டிருக்கிறது. மேலும் ஜூபிலி சிறப்பாக



நடைபெறவேண்டி எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து நற்கருணை ஆராதனை நடைபெற்றது. செப்டம்பர் 21 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கிறிஸ்து ஜூபிலி கொண்டாட்டம் மேதகு ஆயர் தலைமையில் ஆசீர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. 27 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் குழு பாடல் போட்டி வட்டார அளவில் "புனித குழந்தை தெரசாள்" ஆலயம் பிலாங்காலையில் வைத்து நடைபெற்றது. எமது இயக்க தாய்மார்கள் 6 நபர்கள் குழுவாக கலந்து கொண்டு களியல் வட்டாரத்தில் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளனர். 28 ஆம் தேதி திருப்பலிக்கு பின்னர் குடும்ப நல வாழ்வு இயக்கத்தின் "தந்தையர் இயக்கம்" துவங்கப்பட்டு, புதிய பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## தூசைபுரம்

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

செப்டம்பர் மாதம் 1 முதல் 8 ஆம் தேதி வரை எட்டு நோன்பு பங்கில் அனுசரிக்கப்பட்டது. தினமும் காலையில் திருப்பலியும் மாலை 5:30 மணிக்கு கெபியில் சிறப்பு ஜெபமாலையும் இயக்கங்கள் சார்பில் சிறப்பிக்கப்பட்டன. எட்டாம் நாள் மாலை திருப்பலியை தொடர்ந்து ஜெபமாலைப் பவனி ஆனக்குழி குருசடி வரை நடைபெற்றது. சுமார் 22 குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் மாதா காட்சியின் பல்வேறு நிலைகளை வேடமணிந்து பங்கேற்றனர். பங்கு இளையோர்கள் காரோடு DNN மன நோயாளிகள் இல்லம் சென்று சந்தித்து உதவிகள் வழங்கினர். கிறிஸ்து அரசர் மழலையர் பள்ளி மாணவ மாணவியர் ஓண பண்டிகை சிறப்பாக கொண்டாடினர். கல்லுவிளை மற்றும் பங்கில் நடைபெற்ற மாதாந்திர தியானத்தில் பங்கு மக்கள் திரளாக பங்கேற்றனர். 28 ஆம் தேதி புனித வின்சென்ட் தே பவுல் இயக்கத்தினர் பாதுகாவலர் விழாவை சிறப்பாக கொண்டாடினர். அன்று இளையோர் கிளைச் சபை சார்பில் நெய்யூர் புற்றுநோயாளிகள் மருத்துவமனை சென்று உதவிகள் வழங்கப்பட்டது. 28 ஆம்

தேதி தொடங்கி மூன்று நாட்கள் பங்கில் இருந்து சுற்றுலா செல்லப்பட்டது. பங்குத்தந்தை அருள்தந்தை அஜின் ஜோஸ் மற்றும் அருள் சகோதரிகள் இதில் பங்கேற்றனர்.

### ▶ புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம், சூசைபுரம்

அன்னை மரியின் பிறவி திருநாளுக்கு ஆயத்தம் செய்யும் விதமாக செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி முதல் எட்டாம் தேதி வரை காலை 6 மணிக்கு செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது. 05 ஆம் தேதி திருப்பலி பங்கில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மேலும் திருப்பலி முடிந்தவுடன் ஆசிரியர்களுக்காக சிறப்பு செபம் நடைபெற்றது. 07 ஆம் தேதி முதல் வார காணிக்கையை புத்தாலய பலிபீட பணிகளுக்காக பயன்படுத்தபடும் என்று அறிவிக்கப்பட்டது. 08 ஆம் தேதி அன்னை மரியின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. 12 ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு திருப்பலி நற்கருணை ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்பட்டது. 14 ஆம் தேதி திருச்சிலுவையின் புகழ்ச்சி திருநாள் கொண்டாடப்பட்டது. 14 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பங்கு பேரவை கூட்டம் பங்கு தந்தையின் தலைமையில் நடைபெற்றது. பங்கு பேரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் 22,23,24 மற்றும் 26 ஆகிய தேதிகளில் குறிப்பிட்ட இல்லங்களில் மக்கள் ஒன்று கூடி புதிய உறவிய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர். 28 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலியை வின்சென்ட் தே பால் இயக்கத்தினர் சிறப்பித்தனர். குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் அனைவரும் சேர்ந்து பங்குத்தந்தை மற்றும் குழந்தை ஈசோ இயக்க வழிகாட்டிகளுடன் சேர்ந்து தக்காளி விளையில் உள்ள முதியோர் இல்லத்திற்குச் சென்றனர்.

### ▶ தேவ மாதா ஆலயம் கிள்ளியூர்

செப்டம்பர் 02, 03, 04 ஆகிய நாட்களில் திருவிழாவை முன்னிட்டு மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைதொடர்ந்து அருட்தந்தை வினு தலைமையில் தியான உரை மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. 5 ஆம் தேதி மாலை 6 மணிக்கு ஜெபமாலை நவநாள், அதைதொடர்ந்து பங்கு தந்தை ஜோஸ் புரையிடத்துக்குந்நேல் அவர்கள் தலைமையில் திருக்கொடி ஏற்றுதல் நடைபெற்றன. 6 ஆம் தேதி மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன்



தலைமையில் ஆடம்பர திருப்பலி நடைபெற்றன. 7 ஆம் தேதி திருவிழா திருப்பலியின் போது திருமுழுக்கு மற்றும் புது நன்மை வழங்கப்பட்டன. தொடர்ந்து இளையோர் இயக்கம் சார்பாக மாபெரும் இலவச இயற்கை மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. 12 ஆம் தேதி மாலை திருப்பலி அதைதொடர்ந்து மாபெரும் மாதாவின் தேர் பவனி நடைபெற்றது. 14 ஆம் தேதி அருட்தந்தை டோபின் ஆலப்புரைக்கல் தலைமையில் ஆடம்பர ராசா திருப்பலி நடைபெற்றது. அதை தொடர்ந்து ஆலயத்தை சுற்றி மாதா தேர் பவனி நடைபெற்றது. தொடர்ந்து மதநல்லிணக்க பொதுக்கூட்டமும், சமபந்தி விருந்தும் நடைபெற்றது. 21 ஆம் தேதி பங்கு தந்தை தலைமையில் இளைஞர் இயக்கம் புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

செப்டம்பர் 27, குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக முதியோர் இல்லம் சந்திப்பு நடைபெற்றது. மாலை நேரத்தில் பங்கு தந்தை ஜோஸ் தலைமையில் இரண்டு உறவியங்களில் உறவியக்கூட்டம் நடைபெற்றன.

## புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை

செப்டம்பர் 01 முதல் 08-ம் தேதி வரை மாதாவின் பிறவி திருவிழாவை முன்னிட்டு மாலை 5.30 மணிக்கு திருப்பலி, ஜெபமாலை மற்றும் நவநாள் நடைபெற்றன. 8 ஆம் தேதி மாதாவின் பிறப்பு விழாவை முன்னிட்டு ஆடம்பர திருப்பலியும், ஜெபமாலை பவனியும் நடைபெற்றன. 14 ஆம் தேதி, புனித ஆரோக்கிய மாதா உறவிய ஆண்டு விழா பங்கு தந்தை தலைமையில் திரு. கிறிஸ்டோபர் அவர்கள் இல்லத்தில் ஜெபமாலையுடன் ஆரம்பித்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டன. 20 ஆம் தேதி திருப்பலி முடிந்தவுடன் பங்குதந்தை தலைமையில் பங்குப் பேரவை நடைபெற்றது. அன்றைய தினம் மாதர் ஜோதிஸ் சார்பாக முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டன. 27 ஆம் தேதி குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக முதியோர் இல்லம் சந்திக்கப்பட்டது. 28 ஆம் தேதி திருப்பலி புனித வின்சென்ட் தே பவுல் உறுப்பினர்களால் சிறப்பிக்கப்பட்டது.

## நித்திரவிளை

### ▶ புனித சவேரியார் ஆலயம் வாறுதட்டு

மாதாவின் பிறப்பு திருவிழாவை முன்னிட்டு செப்டம்பர் 08, மாலை 6.30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து ஜெபமாலை நடைபெற்றது. அன்றைய தினம் குழந்தை இயேசு இயக்கப் பிள்ளைகள் மாதாவின் வேடம் அணிந்து ஒரு கையில் பூவும் மற்றொரு கையில் மாதாவுக்கு பரிசு பொருளும் ஏந்தி பவனியாக வந்து அலங்கரிக்கப்பட்ட மாதாவின் முன்னிலையில் காணிக்கையாக சமர்ப்பித்தனர். 12 ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து சிறப்பு ஆராதனையும் அருட்தந்தை ஆன்றனி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 14 ஆம் தேதி நலவாழ்வு இயக்கத்தின் சார்பாக தக்காளிவிளையைச் சார்ந்த திரு.சோனிக் றீகன் அவர்கள் பங்கிற்கு வருகை தந்து நலவாழ்வு இயக்கம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை பற்றியும் விளக்கம் அளித்தார். அதன்படி எட்டு பேர் கொண்ட ஒரு குழு தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன் பிறகு பங்கு தந்தையின் தலைமையில் கூடுகை நடைபெற்றது. அக்கூட்டத்தில் தலைவர், செயலர், துணைத் தலைவர் மற்றும் பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மதியம் 3.00 மணிக்கு மறைக்கல்வி மாணவர்களுக்கு பங்களவிலான எழுத்துப் போட்டிகள் நடைபெற்றன. 21 ஆம் தேதி, மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் திருப்பலிக்கு பின்னர் பங்குதந்தையின் தலைமையில் நடைபெற்றது. மாலை 4 மணிக்கு பங்கு பேரவை கூட்டம் பங்குதந்தையின் தலைமையில் நடைபெற்றது. 28 ஆம் தேதி, திருப்பலி வின்சென்ட் தே பவுல் இயக்க உறுப்பினர்களால் சிறப்பிக்கப்பட்டது.

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் கிறிஸ்துராஜபுரம்

செப்டம்பர் 1 முதல் 8 வரை மாதாவின் பிறவி திருநாளை முன்னிட்டு திருப்பலியும் ஜெபமாலையும் மற்றும் ஜெபமாலை பவனியும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இறுதி நாளான எட்டாம் நாள் மாதர் ஜோதி இயக்கம்

சார்பில் உணவு பரிமாறப்பட்டது. செப்டம்பர் 28ஆம் தேதி வின்சென்ட் தே பால் மற்றும் பிரடரிக் ஓசானா அவர்களின் திருநாள் கொண்டாடப்பட்டது. உறுதிமொழி எடுத்து ஒளி ஏந்தி விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முன்சிறை

செப்டம்பர் 09, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர் ஜெபமாலை, ஆடம்பர திருப்பலி, நற்கருணைப்பவனி, குணமளிக்கும் ஆராதனை மற்றும் கைவைத்தல் ஜெப வழிபாடும் நடைபெற்றது. உறவியங்கள் ஜெபமாலை



வழிபாட்டை வழி நடத்தினார். 14 ஆம் தேதி சிலுவையின் புகழ்ச்சி திருநாள் திருப்பலியுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 28 ஆம் தேதி ஏழைகளின் பாதுகாவலராம் புனித வின்சென்ட் பவுல் மற்றும் அருளாளர் பிரடரிக் ஓசானாம் ஆகியோர் திருநாள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. வின்செந்திய சகோதரர்களால் இவ்விழா சிறப்பிக்கப்பட்டது.

### ஜெய மாதா ஆலயம் நித்திரவிளை

ஜெய மாதா ஆலயத்தின் 65 ஆவது பங்கு பெருவிழா ஆகஸ்ட் மாதம் 6 ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. செப்டம்பர் 5ஆம் தேதி ஓணப்பண்டிகை இளையோர்களால் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் உறவியங்கள் சார்பாக அத்தப்பூ கோலமிடுதல் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றி கோப்பை மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. இல்வாழ்வு இயக்கத்தினரால் நடத்தப்பட்ட குழுப்பாடல் போட்டியில் எம் உறுப்பினர்கள் கலந்து கொண்டு மறைவட்ட அளவில் இரண்டாவது பரிசு பெற்றனர். ஏழைகளின் புனிதராம் புனித வின்சென்ட்

தே பவுல் அவர்களின் விண்ணகப் பிறப்பினை முன்னிட்டு 28 ஆம் தேதி வின்செந்தியர்களால் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. 21 ஆம் தேதி, கிறிஸ்து ஜூபிலி 2025 எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்ற கருப்பொருளை மையப்படுத்திய உறவிய ஆண்டு விழாவில் எமது பொறுப்பாளர்கள் கலந்துக் கொண்டனர்.

## தென்காசி மறைத்தள செய்திகள்

### ▶ சகாய மாதா ஆலயம் சுந்தரபாண்டியபுரம்



புதிதாக புனரமைக்கப்பட்ட ஆலய அர்ச்சிப்பு மற்றும் ஆலயத்திருவிழா செப்டம்பர் மாதம் 5,6,7,8 தேதிகளில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. 7 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை புதுப்பிக்கப்பட்ட ஆலயம் ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. அன்றைய நாள் ஆயர் அவர்களோடு இணைந்து தென்காசி மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சுமேஷ் ஜார்ஜ் மற்றும் பங்குதந்தை அருட்தந்தை ஜான் ஜோசப் அவர்கள் இணைந்து திருப்பலி நிறைவேற்றினர்.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

## MONTHLY AGENDA – OCTOBER 2025

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Wed | VC: Vocation camp<br>KKSSS: Educare residential retreat |
| 2 | Thu | KKSSS: Educare residential retreat<br>KKSSS: Medical Camp at Muzhucode<br>SVP: Cleaning camp |
| 3 | Fri | VC: Adoration for Vocation (Kaliyal Forane)<br>KKSSS: Educare residential retreat<br>SINAI: Retreat at Vattakottai |
| 4 | Sat | KII: Online meeting with teachers<br>SMYM: Leadership training<br>MS: Silver Jubilee Inauguration of Commisium<br>ASc: Staff orientation programme<br>MS: Seminar<br>MJ: Awareness programme |
| 5 | Sun | SVP: CC Meeting MJ: Director's visit to Muzhucode Parish Annual Retreat for Priests (5 -10) |
| 11 | Sat | CAT: Forane Secretaries and Promoters Meet at Kalluvilai<br>KKSSS: AIDACT–Special School Teachers training programme.<br>SINAI: Evening Retreat at Malaicode<br>FA: Marriage Preparation Course<br>STI: One day Seminar |
| 12 | Sun | CAT: Bible Fest Forane Level Writing Competition LC: Forane Leaders Meeting SMYM: Central Meeting URM: Arukani Forane Leaders Meeting FA: Marriage Preparation Course MJ: Arukani Forane Visit SVP: AC Meeting SMYM: Youth Election MJ: Bible quiz competition(preliminary) |

| | | |
|---|---|---|
| 13 | Mon | HC: World Palliative care day celebration at Kalluvilai<br>EIRD: Kanyakumari United Christian Council Meeting |
| 14 | Tue | KKSSS: Income generation Programme |
| 17 | Fri | SINAI: Intercessory Prayer |
| 18 | Sat | KII: Forane level monthly activity<br>SMYM: Retreat<br>MJ: One hour class |
| 19 | Sun | SMYM: Retreat & Central Patron's Day Celebration SVP: AC Annual Day MJ: Director's visit to Kattathurai Parish URM: Kaliyal Forane Animators & Organizers Meeting |
| 20 | Mon | FA: Forane Directors Meeting<br>EIRD: Regional United Christian Council Meeting |
| 21 | Tue | SINAI: Intercessory Prayer |
| 22 | Wed | 2nd death anniversary of Fr. Thomas Muttathukunnel (2023)<br>12th death anniversary of Fr. Mathew Plathottam MST |
| 24 | Fri | CML: National Managing Committee Meeting |
| 25 | Sat | KII: Seminar for Animators and Organizers at Kalluvilai<br>SINAI: One day Retreat at Kalluvilai<br>TCSL: Sports day<br>MJ: Awareness programme |

| | | |
|---|---|---|
| 26 | Sun | MS: Rosary Procession SMYM: Patron's Day Celebration MIG: Online Rosary MJ: Director's visit to Nagercoil Parish |
| 28 | Tue | SINAI: Intercessory Prayer |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

**BIRTHDAY OF REV. FATHERS- OCTOBER - 2025**

| | |
|---|---|
| FR. AJIN C JOSEPH | 04 |
| FR. LINTOMON THAKIDIEL | 05 |
| FR. SINU PANICKAPARAMPIL CMI | 15 |
| FR. JOHN JOSEPH | 17 |
| FR. JOSEPH KOLLAMPARAMBIL MCBS | 19 |
| FR. KURIAN MATHEW KOIPURAM | 20 |
| FR. JOSEPH (BIBIN) KOCHEETHARA | 26 |
| FR. JOSE ALBERT CMI | 27 |

## BISHOP’S ENGAGEMENTS - OCTOBER 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 05.30 pm | Thangachimadam : Feast Day Qurbana |
| 2 | Thu | 09.30 am<br>04.00 pm | Cristurajapuram : Priests and Religious Sangamam<br>Kaliakkavilai: Drug awareness march |
| 3 | Fri | 05.30 pm | Thuckalay: CMC Holy Qurbana |
| 4 | Sat | 06.30 am<br>05.00 pm | Varuthattu : Holy Communion<br>Annikarai : Feast Day Qurbana |
| 5-10 | Sun<br>Sun-Fri | 09.00 am<br>05.00 pm | Plankalai : Feast Day Qurbana<br>Sangamam : Annual Retreat for Priests |
| 11 | Sat | 03.30 pm | Kavalam : Feast Day Qurbana |
| 12 | Sun | 05.00 pm | Chembagatharisu : Holy Qurbana |
| 13 | Mon | 04.00 pm | Bishop’s House : SM Year |
| 14 | Tue | | Parish Visit |
| 15 | Wed | | Parish Visit |
| 16 | Thu | 09.30 am | Bishop’s House: Curia meeting<br>Bishop’s House: Forane Vicars |
| 17 | Fri | | Changanaserry |
| 18 | Sat | | Changanaserry >> Thenkasi |
| 19 | Sun | 02.00 pm | Tenkasi : Rosary Rally (Mission |

| | | | |
|---|---|---|---|
| 20 | Mon | 10.00 am<br>03.00 pm<br>05.00 pm | Munchirai : SMYM Badminton Tournament Inauguration<br>Padanthalumoodu: Diocesan Choir group meeting<br>Thettiyode : First Holy Communion |
| 21-25 | Tue-Sat | | Parish visit |
| 26 | Sun - | 03.00 pm | Manjalumoodu: Rosary Rally |
| 27 | Mon | | Mission visit: Kayathar, Virudunagar, Madurai |
| 28 | Tue | | Mission Visit: Chinnamannoor, Cumbam, Periyakulam |
| 29 | Wed | 02.30 pm | Bishop’s House: Curia meeting |
| 30 | Thu | | Sangamam: Meeting of the Directors of departments |
| 31 | Fri | | Parish visit |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**

| FEASTDAYS OF REV. FATHERS - OCTOBER - 2025 | |
|---|---|
| Fr. Shoji Puthenpurackal | 09 |
| Fr. Luka Kollamparampil CMI | 18 |
| Fr. John Paul Puthuvalputhen | 22 |


27-09-2025

Assisi school Jubilee conclusion Chenamcodu


21-09-2025

Jubilee Celebration Holy Qurbana at Vattakottai


21-09-2025

Laying Stone for the new Church at Cheenivilai




**Christ Jubilee Celebration of Uraviums at Kalluvilai**




For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570